உ
சிவமயம்



அராலியைப் பிறப்பிடமாகவும்
மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# சண்முகம் தையல்நாயகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# சண்முகநாயகி மலர்

06.08.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அராலியைப் பிறப்பிடமாகவும்

மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சண்முகம் தையல்நாயகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# சண்முகநாயகி மலர்

**06.08.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




வானுறையும் தெய்வத்தினுள்
தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்பத்தின்
பாசமிகு ஒளிவிளக்கே ஞானச்சுடரே
எங்கள் பாசமிகு அம்மா!
எல்லாம்வல்ல அராலி முத்துமாரியம்மன்
மூளாய் சித்திவிநாயகனை உம்
ஆன்மா சாந்திபெற வேண்டுவதோடு
கண்ணீருடன் இம்மலரினை தம்
மலர்ப்பாதங்களில் சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.




உங்கள் பிரிவால் வாடும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



தோற்றம்
22.08.1938

மறைவு
07.07.2016

அமரர்

# சண்முகம் தையல்நாயகம்

அவர்கள்


## திதி வெண்பா

துர்முகி வருடத்து ஆனிமாதத்தில்
பூர்வபக்க சதுர்த்தி திதியில் - சீர்சேர்
திருமதி தையல்நாயகம் தீயவெலாம் நீங்கி
அருட் சோதியுட் கலந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் கணவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமுறைப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துள்ளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## தேவாரம்

மாதர் பிறைக்கண்ணி யனை மலையான் மகளொடு பாடி
போதொடு நீர் சுமந்தேத்தி புகுவாரவர் பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயார் அடைகின்ற போதும்
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறியாதென கண்டேன்.

## திருவாசகம்

யானே பொய் என்நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் வந்துறு மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் விரும்பும்மாணிக்க மாலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

# திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சக்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகர் அருளிச் செய்த
## திருவாசகச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிலும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

# சிவபுராணம்



நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் னனேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உ ண்ணா ரமுதே உ டையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்
சிவபுராணம் முற்றிற்று.

**இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மைஇல் காட்சி யவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சண்முகம் தையல்நாயகம் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

இலங்கையின் யாழ் மாவட்டத்தில் மருதமும் நெய்தலும் சூழப்பெற்ற அராலியூரில் சங்கரப்பிள்ளை (உபாத்தியார்) உத்தமி யாள் தம்பதிகளின் தவத்தின் பயனாக மூன்றாவது பிள்ளையாகவும் ஏகபுத்திரியாகவும் 1938.08.22 இல் இவ்வுலகில் பிறந்தார்.

இவர் பிறந்தது முதல் இவர்களது குடும்பம் செல்வச் செழிப்பு மிகுந்ததாய் இருந்ததுடன் ஏகபுத்திரி என்பதால் மிகவும் செல்லமாக வும் ஆசையாகவும் வளர்த்து வந்தனர். உறவினர்கள், அயலவர்கள், சகோதரர்கள் இவரை ஆசையக்கா, ஆசைத்தங்கச்சி என அன்புடன் அழைத்து வந்தனர்.

ஆனால் எதிர்பாராத திடீர் நோய்வாய்ப்பட்ட தாய் இவரது எட்டாவது வயதில் இறையடி சேர்ந்தார். ஆனால் தந்தையும் தமையன் கணபதிப்பிள்ளை (ஆசையண்ணா) மிகவும் அன்பாக வளர்த்து வந்தனர். எனினும் சிறிது காலத்தின் பின் இவரது அப்பம்மா (செல்லாச் சிப்பிள்ளை) வீட்டில் இணைந்து கூட்டுக் குடும்பமாக அப்பாச்சியின் கண்காணிப்பிலும் சிறியதாய் அப்புச்சி, தந்தை, பெரிய தந்தை, சிறிய தந்தை, அவர்களது பிள்ளைகள் விஜயலட்சுமி, சுந்தரப்பிள்ளை, அமராவதிப்பிள்ளை, தெட்சணாமூர்த்தி, ஞானாம்பிகை, வேலுப் பிள்ளை, அம்பலவாணர், சிற்றம்பலம் ஆகியோருடன் சேர்ந்து வளர்ந்து வந்தார்.


சகோதரர்களுடன் சென்று அராலி சரஸ்வதி மகா வித்தியால யத்தில் கல்வி கற்றார். இவர் பூமி சாஸ்திரம், கணிதம், மனக்கணிதம், தமிழ் போன்ற பாடங்களில் மிகவும் சிறந்து விளங்கினார். கல்வியில் சிறந்து விளங்கியபோதிலும் அக்கால வழக்கப்படி உயர்கல்வி கற்கா மல் வீட்டிலேயே தந்தையார் பாடங்களைக் கற்பித்ததுடன் தையல், தேவாரப்பா, இலக்கியம், அறநெறிகள், சைவநெறி, கைப்பணி என்பவற்றையும் கற்றுக் கொடுத்தார். தந்தையார் மகள் மீது கொண்ட பற்றுக்காரணமாக பட்டினத்துக்கு உறவினருடன் காரில் அழைத்துச் சென்றே துணி வகைகள் வாங்கிக் கொடுத்து இவரது தையல் கலையை வளர்த்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும்போது தந்தையாராலும் தமையனும் மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பமானது. சைவ உணவுப் பழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாசமிகு கணவருடன் 1968இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர், பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இவருக்கு ஏற்றாற்போல் அவரது தாயரின் ஊரான மூளாயில் வேலாயுதம் பெற்றிப்பிள்ளையின் ஐந்தாவது மகன் சண்முகத்தை மாப்பிள்ளையாக பெரியோரால் நிச்சயிக்கப்பட்டது. இவர் மருத்துவ ஆய்வுகூட நுண்கலைஞராக (MLT) கொழும்பு தேசிய வைத்திய சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். இவர்களுக்கு 1960ஆம் ஆண்டு ஆவணி மாதம் மிகவும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. இவர்களது இல்லற வாழ்வின் பயனாக ரஞ்சினி, பாஸ்கரன், ரவீந்திரன், கமலாஜினி, அரவிந்தன் ஆகிய ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்து சிறப்பாக வளர்த்து வந்ததுடன் மாமியாரையும் மிகவும் அன்பாக உபசரித்து ஒத்துழைப்பாக நடந்து கொண்டார்.

இவர் இவரது மாமியாரை ஆச்சி என்று அழைப்பார். அவரும் நீ எனது மகள் இல்லாத குறையைத் தீர்க்க வந்த மருமகள் என வாஞ்சையுடன் "பிள்ளை" எனவும் அழைப்பார். அன்னாரும் ஆச்சியின் மகளின் பிள்ளை தவாம்பிகைநாதனை தன்பிள்ளை போல் அன்புகாட்டி வளர்த்தார்.

கணவரின் கடமைக்கு உதவியாக கண்டி, வத்தளை, உனுப்பிட்டியா போன்ற இடங்களில் அவர் வேலை இடம் மாற்றலாகிச் செல்லும்போது அவருடன் அங்கு சென்று பிள்ளைகளையும் ஆரம்பக் கல்வியைத் தொடரும் நோக்கில் உனுப்பிட்டி தமிழ் வித்தியாலயத்தில் சேர்த்து கற்பித்து வந்தார். எனினும் ஒவ்வொரு தவணை விடுமுறை, விசேட தினங்களில் தவறாது பிள்ளைகளுடன் வந்து மூளாயில் மாமியாருடன் தங்கி நின்று அவரை மகிழ்வித்து உதவினார்.

1975இல் மாமியார் சுகயீனமடைந்த செய்திகேட்டு இளைய மகளுடன் வந்து அவரை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வியைத் தொடரவைத்து மாமியாருக்கு உணவு சமைத்து பரிமாறி வைத்தியசாலையில் அவரைப் பராமரித்து வந்தார். எனினும் அவரும் சிறிது காலத்தில் இறையடி சேர்ந்தார். அவரது இறுதிக்கடமைகளை யும் கணவருடன் இணைந்து சிறப்பாக மேற்கொண்டு மீண்டும் கொழும்பில் வாழ்ந்து வந்தார்.

அன்னாரின் பக்கபலத்துடன் சிறப்பாக கடமையாற்றிய கணவர் சண்முகத்திற்கு அரச புலமைப்பரிசில் திட்டம் கிடைக்கப்பெற்று லண்டன் செல்லும் வாய்ப்புக் கிடைக்க அவர் குடும்பத்தை கொழும் பில் தனியாக விட்டுவிட்டு செல்ல மறுத்தபோதிலும் தயங்காது தான் குடும்பத்தைப் பாதுகாப்பேன் நீங்கள் சென்று வாருங்கள் என லண்டன் அனுப்பி வைத்துவிட்டு 1978 தொடக்கம் மூளாயில் வந்து தமையன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர் உதவியுடன் வாழ்ந்து வந்தார்.

சிறப்பாக மற்றவர் வியக்கத்தக்க வகையில் கணவர், பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகையில் கணவரும் நோய்வாய்ப்பட்டு இருந்த போதிலும் அவரையும் நன்றாகப் பராமரித்து வருகையில் 1995இல் கணவரும் இறையடி சேர்ந்தார். இத்துயரில் அவர் துவண்டு போய் அப்பா இல்லாது நான் என் செய்வேன் என ஆறாத்துயருற்று இருந்த போதிலும் கணவர் கூறியதன் நிமித்தம் பிள்ளைகளை கரைசேர்க்கும் பணி உன்னுடையதே என்பதை நினைத்து தனது ஐந்து பிள்ளைகளுக்கும் சிறந்த மருமக்களைத் தேடி நிச்சயம் செய்து திருமணம் முடித்து வைத்ததுடன் பேரப்பிள்ளைகளுக்கும் உணவூட்டி பராமரித்து மகிழ்ந்தார்.

இவர் நோய் வருவதற்கு முன்னரே தன் கடமை முடிந்துவிட்டது எனவும் தான் இனி இறக்கப் போவதாகவும் மூத்தமகளுக்குக் கூறி "உனக்கு உதவியாக காவலாக இருந்திட்டன் இனி பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள் நீ தனியாக இருப்பாய் தானே" எனத் தெளிவாகக் கூறினார். கூறி ஒரு சில நாட்களில் சமையலறையில் விழுந்தார். உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அழைக்கும்போது இது எனது இறுதி வருத்தம் தான் வைத்தியசாலை போகத்தேவையில்லை எனக்கூறி மறுத்தார். எனினும் இளையமகளின் வற்புறுத்தலால் வைத்தியசாலை அழைத்துச் சென்று பராமரித்து வந்தனர். அங்கு சென்றும் வைத்தியர் தாதியர்களுக்கு தனக்கு வைத்தியம் பார்ப்பது வீண் எனவும் கூறி, தேவாரம், திருப்பதிகள் பாடி அராலி முத்துமாரியம்மா என்னைக் கூப்பிடு எனக்கூறி வணங்குவார்.

வாழ்நாள் முழுவதும் பூர்வபக்க சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி இருவகை சதுர்த்தி விரதம் அனுட்டித்த இவர் தெட்சண காலம் தொடங்க முன் உத்தராயன காலத்தில் ஆனி மாத பூர்வபக்க சதுர்த்தி திதியில் 07.07.2016இல் இறையடி சேர்ந்தார்.

இவரது இறுதிக் கிரியைக்காக தானே தனது அலுமாரியில் புதிய சேலை, சட்டை, பணம் என்பவற்றுடன் நினைவுமலர் அடிப்பதற்குத் தேவையான பரம்பரை வம்சாவழி அட்டவணையையும் எழுதி வைத்துச் சென்ற காரணத்தினால் இவரது பிள்ளைகளாகிய நாம் இவ் சண்முகநாயகிமலரை வெளியிடுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புலம்பல்

பத்துமாதம் சுமந்து பெற்று
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பட்டதுயர் அனைத்திற்கும் அம்மா
பாரினில் இணையுண்டோ.

பெற்ற பிள்ளைகளை பொறுப்புடனே
கல்வி தனை கற்க வைத்த அம்மா
தந்தையை காலன் அழைத்து சென்றபின்பும்
எங்கள் ஐவருக்கும் மணமுடித்து வைத்தீர் அம்மா

பேரப்பிள்ளைகளுக்கு ஊட்டி வைத்து
பக்குவமாய் கவனித்து கடமைதனைச் செய்து நின்றாய்
போதும் என் கடமையென கூறிமுடிக்கையில்
காலனவனும் கவர்ந்துவிட்டான் - அம்மா

விதிசெய்த விளையாட்டு என மனதை
ஆற்றி நின்றும் முடியவில்லை அம்மா
நித்தம் உம் நினைவில்
வருந்தி வாடுகின்றோம் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

எம் அருமை மாமியாரே நித்தம்
அன்பாக அறிவுரை கூறும் நீர்
எங்களை வாசல்வரை வந்து வழியனுப்பி வைக்கும் நீர்
இன்று எங்குதான் சென்றுவிட்டீர்.

# பேரப்பிள்ளைகள் துயரம்

அன்புடனே உணவூட்டி சீராட்டி
எண்ணெய் தேய்த்து எங்களைப் பக்குவமாய்
வளர்த்ததுடன் இனிப்புப் பண்டங்கள்
மிக்சர்கள் வாங்கித் தந்து அறிவுரைகள்
கூறும் அம்மம்மா அப்பம்மா
எங்குசென்றீர் ஓடிவாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 22-08-1939

உதிர்வு 07-07-2016

**மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான**
**பரிபாலன சபை நிர்வாக சபை உறுப்பினர்**

**திரு ச. அரவிந்தன் அவர்களின்**

**அன்புத் தாயார்**

# அமரர் திருமதி
# தையல்நாயகி சண்முகம்

இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய்.
08-07-2016


**மூளாய் வதிரன்புலோ**
**சித்திவிநாயகர் தேவஸ்தான**
**பரிபாலன சபை**

0213215867, 0212251066



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1938-08-22

உதிர்வு
2016-07-07

## அமரர் சண்முகம் தையல்நாயகம்


அன்புடைய வாழ்விற்கு முழு அர்த்தமாய் வாழ்ந்தவரே
எம் ஆசிரியர் அரவிந்தன் அவர்களின் பாசமிகு தாயாரே
தங்கள் பிரிவு கண்டு துயருறும் அன்புசார் உறவுகளே!
உங்கள் அனைவருக்கும் பாசத்தின் உருவமாய் வாழ்ந்தவரே
தரணியில் உங்கள் நாமம் என்றும் நிலைத்து நிற்க
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளியூட்டியவரே!

தாங்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு துயரத்தில் ஆழ்ந்த தங்கள் உறவுகளோடு நாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/காரைநகர் இந்துக்கல்லூரி,
காரைநகர்.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1938-08-22

உதிர்வு
2016-07-07

எமது கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் அரவிந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சண்முகம் தையல்நாயகம்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
யா/காரைநகர் இந்துக்கல்லூரி,
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின்

# கண்ணீர் காணிக்கை



| மறைவு | | உதிர்வு |
|---|---|---|
| 22 | | 07 |
| 08 | | 07 |
| 1939 | | 2016 |

எமது மன்றத்தின் முன்னாள் உறுப்பினர்
திரு ச. அரவிந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் திருமதி சண்முகம் தையல்நாயகி

[illegible]

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவர் ஆத்மா எல்லாம் வல்ல எம்பெருமானின் திருப்பாதங்களைச் சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவால் துயருறும்
மூளாய் இந்து இளைஞர் மன்றம்

---

# கண்ணீர்க் காணிக்கை



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1938 | | 2016 |
| 08 | | 07 |
| 22 | | 07 |

அமரர்

## சண்முகம் தையல்நாயகி

அவர்கள்

பண்பும் பாசமும் பாங்கான புன்சிரிப்பும்
மண்ணிலே நல்ல வண்ணம் வாழ விதி அழைத்ததோ !
எண்ணிநாம் கலங்குகிறோம் என் செய்வோம் என்றறியோம்
புண்பட்ட நெஞ்சமெனும் [illegible] தவிக்கின்றோம்
கண்ணிலே உங்கள் கதை கனவு போன்றானதுவே
தண்மைய வாழ்வுமுறை தரணியிலே மணம் வீசும்
வண்மைகளை எண்ணிநாம் கரம்கூப்பிச்
சாந்தி சொல்வோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக....

08.07.2016

# கண்ணீர் காணிக்கை

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1938 | | 2016 |
| 08 | | 07 |
| 22 | | 07 |



அமரர் சண்முகம் தையல்நாயகி அவர்கள்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
நனவாகி உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
வானுலகம் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்முன்னே நிஜமாகிவிடுவீர்..... !

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

08.07.2016

அலவெட்டி பேற்று.

NewBarathyPrinters.Alaveddy South.

# விழிநீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 22 | | 07 |
| 08 | | 07 |
| 1938 | | 2016 |



சண்முகம் தையல்நாயகி அவர்கள்

கள்ளம் அற்ற வெள்ளைச் சிரிப்பால்
உள்ளம் அனைத்தும் கொள்ளை கொண்டு
வஞ்சம் அற்ற நேசமாய்ப் பண்பால்
நெஞ்சம் அனைத்தும் வெற்றி கொண்டு
சீற்றம் அற்ற அன்புச் சொல்லால்
சுற்றம் அனைத்தும் இனிக்கச் செய்தீர்.....
கலகலப்பாய் பழகும் உம் முகத்தில்
சலசலப்பு ஏதுமில்லை...! சலனங்கள் ஏதுமில்லை...!
மலையான உம்மை இழந்ததனால் எங்கள்
தலைமேல் இடியென சுமைகள் வீழ்ந்ததன்றோ !
நிலையான சாந்தியதை நிரந்தரமாய் பெற்றுவிட
நிமலனடி பணிகின்றோம்.....!

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

08.07.2016

அலவெட்டி மேற்கு.

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி

**அமரர்**

## சண்முகம் தையல்நாயகம்

அவர்கள்

சிவபதமடைந்த செய்திகேட்டு உடனே வந்து பல வழிகளிலும் உதவி செய்த உறவினர்கள், அயலவர், நண்பர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர் மற்றும் இறுதி யாத்திரையில் நேரில் வந்து கலந்து சிறப்பித்து சகல விதத்திலும் உதவி செய்த அனைவருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறிய அனைவருக்கும், கடிதம், தந்தி, மின்னஞ்சல், தொலைபேசி மூலம் துக்கம் விசாரித்தவர்களுக்கும், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளை முறையே நடாத்திய குருமார்களுக்கும் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவி செய்து ஒத்துழைத்த அனைவருக்கும் இவரது நினைவாக இன்று வெளியிடும் இம்மலரை அச்சடித்து உதவிய அச்சகத்திற்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மூளாய் தெற்கு,
மூளாய்,
சுழிபுரம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சா வழி

நரசிங்கமுதலி
↓
சண்முகம்
↓
வேலாயுதர்
↓
நாகநாதர்
+
சிதம்பரம்

- சின்னாச்சிப்பிள்ளை + வீரவாகு
- பெற்றிப்பிள்ளை
- செல்லம்மா + செல்லப்பா
- வள்ளியாச்சி + அப்பாத்துரை

நரசிங்க முதலி
↓
சதாசிவப்பிள்ளை
+
பெயர் தெரியாது

- சண்முகநாதன் + பெயர் தெரியாது
- வேலாயுதம்

**பேரம்பலம்**
+
**பெயர் தெரியாது**

**உத்தமியாள்**

- தாசிவம்பிள்ளை + மகேஸ்வரி
  - ாபாலகிருஷ்ணன்
  - ற்றிவேல்
  - ம்சோதி
  - ாநாதன்
  - ங்கநாயகி
- தியாகராசா + நாகரத்தினம்
  - புஸ்பராணி
  - தேவராணி
  - பத்மராணி
  - கணேசராஜா
  - ஜெயராஜா
- சந்திரசேகரம் + சிவகாமி
  - வரதராஜ்
  - கலாவதி
  - குலேந்திரன்
  - பாலேந்திரன்
  - உமாவதி
- சகாதேவன் + புவனேஸ்வரி
  - ரதானந்தன்
- சிவபாதசுந்தரம் + மங்கையற்கரசி
  - சாரதா
  - தர்மசீலன்
  - சத்தியசீலன்
  - குணசீலன்
  - ஞானசீலன்
- நாகரத்தினம்

**சண்முகம்**

- ரவீந்திரன் + தலாம்பிகை
  - மயூரேசன்
- கமலாஜினி + சிறீகரன்
  - சியாமி
  - சௌமினி
- அரவிந்தன் + ரதிக்கா
  - அர்ச்சயன்
  - அர்ச்சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.




இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–

கவிதரன் பிறிண்டேர்ஸ், வழக்கம்பரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org